# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අති විශෙෂ අதி விசேஷமானது**

අංක 2276/26 – 2022 අප්‍රේල් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා – 2022.04.21

*2276/26 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ. பி. 21/1978* (X) (ஆ)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***
***25 அ என்னும் பிரிவின் கீழான கட்டளை***

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் தினேஸ்குணவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், PV 17745 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான சினெக் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2022 பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதிய 2268/90 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இல் காணப்படும் "முகாமைத்துவத்தில் பட்டப்பின்படிப்பு திப்புளோமா" என்னும் பதிவையும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, அதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

**அட்டவணை I**

*நிபந்தனைகள்*

*1. சினெக் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, மருத்துவ மற்றும் சுகாதார உற்பத்தி முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞான இளமானி (SLQF மட்டம் 6) தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரத்தில்) உயிரியல் விஞ்ஞானம் அல்லது பௌதீக விஞ்ஞானம் அல்லது தொழில்நுட்பப் பிரிவில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) சாதாரண சித்திகளினை குறைந்தபட்ச நுழைவுத் தகைமையாக அமைந்தொழுகுதல் வேண்டும்.*


1A – PG5820 – 510 (2022/04)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. சினெக் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| மருத்துவ மற்றும் சுகாதார உற்பத்தி முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞான இளமானி | பீஎஸ்சீ கௌரவ (மருத்துவ மற்றும் சுகாதார உற்பத்தி) |

**தினேஸ் குணவர்தன,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2022, ஏப்பிறல் 08.*

EOG 04 - 0095